### தகவல் தொழில்நுட்பத் துறை சார்பில்

# தமிழ்நாட்டில் முதன்முறையாக அறிவுசார் சொத்துரிமை மாநாடு!

## துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தொடங்கி வைத்தார்!

**சென்னை, ஜூலை 31-**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர் கள் தலைமையிலான திராவிட மாடல் ஆட்சியில் தமிழ்நாடு தகவல் தொழில்நுட்ப துறையில் சிறந்து விளங்கி வருவதாக துணை முதல மைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பெருமிதம் தெரிவித் துள்ளார்.**



சென்னை அண்ணா நூற்றாண்டு நூலக அரங்கில், தகவல் தொழில்நுட்ப வியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை சார்பில் "INNOVATE IN TN IP CONCLAVE" மாநாட்டுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்நிலையில், தமிழ்நாட்டை இந்தியாவின் புதுமை தலைநகராக மாற்றும் கருப்பொருள் கொண்ட அறிவுசார் சொத்துரிமை எனும் இந்த மாநாட்டை துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்து மாநாட்டு அரங்குகளை பார்வையிட்டார்.

தமிழ்நாடு முழுவதும் இருந்து 16 ஆராய்ச்சியாளர்கள் தங்கள் காப்புரிமை பெற்ற ஆழ்நிலை கண்டுபிடிப்புகளை காட்சிப்படுத்திய தொழில்நுட்ப கண்காட்சி அரங்குகளையும் துணை முதலமைச்சர் பார்வையிட்டார். அமெரிக்கன் சொசைட்டி ஆஃப் மெக்கானிக்கல் இன்ஜினியர்ஸ் இந்தியா, தேசிய ஆராய்ச்சி மேம்பாட்டுக் கழகம், மத்திய உயர்கணினி மேம்பாட்டு மையம், போஷ் இந்தியா, மஹிந்திரா அண்டு மஹிந்திரா, இந்திய அறிவியல் தொழில்நுட்பம் மற்றும் பொறியியல் வசதிகள் வரைபடம் உள்ளிட்ட 6 நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்களும், தமிழ்நாடு தொழில்நுட்ப பரிமாற்ற வசதி மையத்தின் சட்ட பூர்வ பங்குதாரர்களின் விருப்பக் கடிதங்களும் பரிமாறிக் கொள்ளப் பட்டது.

மாநாட்டில் சிறப்புரை ஆற்றிய துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், தமிழ்நாட்டில் அதிக அளவில் தொழில் முதலீடுகள் குவிந்து வருவதாக பெருமிதம் தெரிவித்தார். தொழில் முதலீடுகளை ஈர்ப்பதில் நாட்டிலேயே முதன்மை மாநிலமாக தமிழ்நாடு விளங்குகிறது என்றும் அவர் கூறினார். திராவிட மாடல் அரசு புதிய தொழில்நுட்பங்களை எப்போதும் வரவேற்கிறது என கூறிய துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான திராவிட மாடல் ஆட்சி காலத்தில் தகவல் தொழில்நுட்ப துறை சிறந்து விளங்குகிறது என்று தெரிவித்தார்.

இந்த மாநாட்டில் தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் பழனிவேல் தியாகராஜன், மாநிலத் திட்டக்குழு துணைத் தலைவர் ஜெயரஞ்சன், ஆராய்ச்சியாளர்கள், ஸ்டார்ட் அப் நிறுவனங்கள், தொழில்துறை முதலீட்டாளர்கள், கொள்கை வகுப்பாளர்கள் என 1,500க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

### 43 சேவைகளின் அரங்குகள் அமைக்கப்பட்டு

# திருச்சி உறையூரில் 'உங்களுடன் ஸ்டாலின்' திட்ட முகாம்!

## அமைச்சர் கே.என்.நேரு நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்!

திருச்சி, ஜூலை, 31-

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பொதுமக்கள் நலன் பெறும் வகையில் தமிழக முழுவதும் 'உங்களுடன் ஸ்டாலின்' சிறப்பு முகாமினை நடத்துவது திட்டமிட்டு கடந்த 15. 07 .2025 அன்று கடலூர் மாவட்டம் சிதம்பரத்தில் துவக்கி வைத்தார்.

அதனைத் தொடர்ந்து இந்த முகாம்கள் தமிழகம் முழுவதும் நாள்தோறும் நடைபெற்று வருகிறது .அதன் ஒரு பகுதியாக 'உங்களுடன் ஸ்டாலின்' சிறப்பு முகாம் திருச்சி உறையூர் வெக்காளியம்மன் கோவில் தெரு பகுதியில் நடைபெற்றது. இந்த முகாமில் நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு நேரில் ஆய்வு மேற்கொண்டு பொதுமக்களிடம் மனுக்களைப் பெற்றுக் கொண்டார்.

மேலும் பொதுமக்களிடம் பெறப்படும் கோரிக்கை மனுக்களை பதிவேற்றம் செய்வதையும் முகாமின் செயல்பாடுகளையும் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு பொதுமக்களுடன் கலந்துரையாடி பயனாளிகளுக்கு நலத் திட்ட உதவிகளை வழங்கினார்.

முகாமில் உள்ள 13 துறைகளின் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை, எரிசக்தி துறை, கூட்டுறவு உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, மாற்றுத்திறனாளிகள் நலத்துறை, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை, பிற்படுத்தப் பட்டோர் மிகவும்பிற்படுத்தப்பட்டோர் சிறுபான்மையினர் நலத் துறை, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு துறை, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, குறு சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை, தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவை துறை, சிறப்பு திட்ட செயலாக்கு துறை மற்றும் இலவச மருத்துவ முகாம் ஆகிய 43 சேவைகளின் அரங்குகள் அமைக்கப்பட்டு பொதுமக்களிடம் மனுக்கள் பதிவு செய்யப் பட்டது.

தொடர்ந்து பொதுமக்களிடம் கோரிக்கை மனு ககளையும் பெற்று அதிகாரிகளிடம் உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டது.

இந்நிகழ்வில் மாவட்ட ஆட்சித் தலைவர் சரவணன், மாநகராட்சி மேயர் அன்பழகன், மாநகராட்சி ஆணையர் மதுபாலன், மாவட்ட நகர் ஊரமைப்பு குழு உறுப்பினர் வைரமணி, நகர பொறியாளர் சிவபாதம், பொதுச் செயலாளர் இளங்கோ உள்ளிட்ட மாமன்ற உறுப்பினர்கள் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

'ஓரணியில் தமிழ்நாடு' 'உங்களுடன் ஸ்டாலின்' திட்டமும் மக்களிடம் நல்ல வரவேற்பு பெற்றுள்ளது. ஆனால் அதை பார்த்து எடப்பாடி பழனிச்சாமிக்கு அச்சம் வந்துவிட்டது அதனால் அவர் அந்த திட்டங்களை விமர்சிக்கிறார் திருச்சியில் அமைச்சர் கே என் நேரு பேட்டி

திருச்சி மாநகரம் உறையூர் பகுதிக்குட்பட்ட எட்டு மற்றும் ஒன்பதாவது வார்டுகளில் உங்களுடன் ஸ்டாலின் முகாம் இன்று நடைபெற்றது இந்த முகாமை நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சருக்கு என் நேரு நேரில் பார்வையிட்டு மக்களுடைய கோரிக்கைகளுக்கு ஏற்றவாறு நலத் திட்ட உதவிகளை வழங்கினார்.

தொடர்ந்து செய்தியாளர்களை சந்தித்து பேசிய அமைச்சர் கே.என்.நேரு, உங்களுடன் ஸ்டாலின் திட்டம் மக்களிடம் நல்ல வரவேற்பை பெற்றுள்ளது.

எதிர்க்கட்சி தலைவர் எடப்பாடி பழனிச்சாமி நான்கு ஆண்டுகள் வெளியே வராமல் தற்போது தான் வெளியே வந்துள்ளார். உங்களுடன் ஸ்டாலின் திட்டம் தேர்தலுக்காக என கூறும் எடப்பாடி பழனிச்சாமி தற்போது வெளியே வந்துள்ளது தேர்தலுக்காக தான்.

மக்கள் ஐந்தாண்டுகள் எங்களுக்கு வாய்ப்பு வழங்கி உள்ளார்கள். ஐந்தாண்டுகளுக்குள்ளாக மக்களுக்கு தேவையானதை தொடர்ச்சியாக செய்து வருகிறோம் மக்களிடம் நல்ல ஆதரவு இருக்கிறது 'உங்களுடன் ஸ்டாலின்' திட்டத்தை மக்கள் யாரும் குறை கூறவில்லை.

உங்களுடன் ஸ்டாலின் திட்டமும், ஓரணியில் தமிழ்நாடும் மக்களிடம் நல்ல வரவேற்பு கிடைத்துள்ளதால் எடப்பாடி பழனிச்சாமிக்கு அச்சம் வந்துவிட்டது அதனால் இந்த திட்டங்களை அவர் விமர்சனம் செய்கிறார்.

எதிர்க்கட்சித் தலைவர் ஆன பின்பு அவர் மக்களை சந்திக்காமல் தற்போது அவர் வெளியே வந்துள்ளார் அவர் இந்த திட்டங்களை விமர்சிப்பது நியாயமா ?

வட மாநில மக்கள் இன்று இரு மொழி கொள்கைக்காக போராடுகிறார்கள். காங்கிரஸ் மத்தியில் ஆட்சி செய்த பொழுது திமுக அவர்களுடன் கூட்டணியில் இருந்தது தமிழ்நாட்டிற்கு தேவையானவற்றை தி.மு.க. அரசு கேட்ட போது அவற்றை காங்கிரஸ் அரசு செய்து கொடுத்தது ஆனால் அதிமுக பா.ஜ.க. கூட்டணியில் அ.தி.மு.க. தமிழ்நாட்டில் ஆட்சியில் இருந்த போது மத்தியில் ஆட்சியில் இருந்த பா.ஜ.க. தமிழ்நாட்டிற்கு தேவையான எதையும் செய்யவில்லை என்று கூறினார்.



தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை அவைக் குழு ஆய்வுக் கூட்டம் அவைக் குழுவின் தலைவரும் எழும்பூர் சட்டமன்ற உறுப்பினருமான வழக்கறிஞர் இ.பரந்தாமன் தலைமையில், மதுரை மாவட்ட ஆட்சியர் பிரவீன்குமார், ஐ.ஏ.எஸ்., முன்னிலையில் மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்றது. இவ்வாய்வுக் கூட்டத்தில் அவைக் குழு உறுப்பினர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்துகொண்டனர்.


